பக்கங்கள் 15+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 22 செவ்வாய்க்கிழமை 06.01.2026 | அதிர்வு 160

## தந்தை, தாய், மகள் தீயில் எரிந்து பலி!

### குடும்பத் தகராறால் விபரீதம்



அனுராதபுரம், கலென் பிந்துனுவெவ, படிகாரமடுவ பகுதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற மிகத் துயர 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தொல்பொருள் திணைக்களத்தை எதிர்த்து வடக்கு, கிழக்கில் பேரணி

## தமிழரசின் எம்.பி. சாணக்கியன் அறிவிப்பு



“இலங்கையில் சட்டங்கள் வெவ்வேறாகச் செயற்படுகின்றன. சிறுபான்மையின மக்களுக்கு ஒரு நீதியும், பெரும்பான்மையின மக்களுக்கு இன்னுமொரு நீதியும் இந்நாட்டிில் தொடர்ந்து வரும் ஆட்சியாளர்களால் திணிக்கப்பட்டு வருகின்றன. தொல்பொருள் திணைக்களத்துக்கு எதிராக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவிய மாபெரும் எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடத்தவுள்ளோம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் 02▶

# சட்டவிரோத மதுபானம் அருந்திய ஐவர் சாவு!

### நால்வர் வைத்தியசாலையில் அனுமதி சந்தேகத்தில் பெண்ணொருவர் கைது

(க.மகாதேவன்)

வென்னப்புவ, வைக்கால – தம்பறவில பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை 5 பேர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளனர். மேலும் நால்வர் ஆபத்தான நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோத மதுபானம் எனக் கருதப்படும் 04▶



## தொல்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

வெல்லாவெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கண்ணபுரம் பிரதேசத்தில் தொல்பொருள் திணைக்களத்தினரால் வழக்குத் தொடுக்கப்பட்ட அந்தப் பிரதேச மக்களை நேற்றுச் சந்தித்து உரையாற்றும் போதே அவர் மேற்கொண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

”வவுனியாவில் குருந்தூர் மலை விவகாரத்தில் சிறியதொரு இடத்தில் தொல்பொருள் அடையாளங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அது விகாரை என கண்டறியப்படவில்லை. ஆனால் விகாரைதான் இருந்தாகக் கருதி அதனைச் சூழவுள்ள ஆயிரம் ஏக்கர் காணியை தொல்பொருள் திணைக்களத்தினர் எல்லையிட்டு அடையாளப்படுத்தியுள்ளனர்.

இந்தக் கண்ணபுரத்தில் இந்த ஆலயம் தொல்பொருள் சான்று எனக் கருதப்பட்டால் மக்களாகிய நீங்கள் சிந்தித்து பாருங்கள். இதனைச் சூழவுள்ள ஆயிரம் ஏக்கர் என்றால் எவ்வளவு பிரதேசத்தை அவர்கள் ஆக்கிரமிப்பார்கள் என்பதைச் சிந்தியுங்கள்.

இதேபோன்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள பியங்கல என்னும் இடத்திலும் தொல்பொருள் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் அங்கும் விகாரைதான் என்று ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

தொல்பொருள் இடமாக பிரகடனப்படுத்தப்பட்டால் அங்கு எந்தவிதமான கட்டுமானங்களைச் செய்வதாக இருந்தாலும் தொல்பொருள் திணைக்களத்தினரின் அனுமதி பெற வேண்டும். பியங்கல என்ற இடத்தை பார்வையிட சிங்கள மக்கள் வருகை தரும்போது வழிபடுவதற்கு விகாரை தேவை என அதனைக் கட்டினார்கள். பின்னர் அதனைப் பூஜை வழிபாடுகள் செய்ய விகாராதிபதி, பின்னர் அவர் தங்குவதற்கு வீடு, தானம் வழங்குவதற்கு மக்கள் குடியேற்றம் என விஸ்தரித்துள்ளார்கள்.

ஆனால் தமிழர் பிரதேசங்களில் உள்ள தொல்பொருள் பிரதேசங்களில் அனுமதி மறுக்கப்படுகின்றது. மீறினால் பிணையில்லாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை.

கடந்த மாதம் வாழைச்சேனை நீதிமன்றம் பிரதேச சபையின் அனுமதியின்றி தொல்பொருள் பதாகை நட முடியாது எனத் தீர்ப்பளித்துள்ளது. பிரதேச சபைகள் தமிழரசுக் கட்சி வசம் உள்ளமையால் இதற்கு அனுமதி மறுக்கப்படும். இதே வேளை, தேசிய மக்கள் சக்தி பிரதேச சபைகளில் ஆட்சியில் இருந்தால் இலகுவாக எமது நிலங்கள் பறிபோகும் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

இந்த நிலைமையை வன்மையாகக் கண்டித்து வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவிய மாபெரும் போராட்டம் ஒன்றை நடாத்துவதற்குத் தயாராகி வருகின்றேன். இதற்கு மக்களாகிய நீங்களும் ஒத்துழைப்பை நல்க வேண்டும்.

போராட்டத்தை எங்கே நடத்தப் போகின்றோம், எப்போது நடத்தப் போகின்றோம் என்பதை நடத்துவதற்கு ஒருசில தினங்களுக்கு முன்னரே அறிவிப்பேன். தற்போது கூறினால் புலனாய்வாளர்களுக்கு இலகுவாகி விடும். அவர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டுமல்லவா? அவர்கள் தேடிக் கண்டுபிடிக்கட்டும்.” – என்றார்.










# மக்களின் ஆதரவே அரசின் உண்மைப் பலம் அவர்களிடமே ஆட்சியின் ஆயுளும் தீர்மானம்

## முன்னாள் அமைச்சர் ராஜித சுட்டிக்காட்டு

"ஓர் அரசின் நிலைத்தன்மையும் நீடித்த ஆட்சியும் உண்மையில் மக்களிடமே உள்ளது. அதாவது அரசின் ஆயுள் என்பது மக்களின் கைகளிலேயே உள்ளது."

– இவ்வாறு முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிரணியின் அரசியல் செயற்பாடு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த ஆட்சியைக் கவிழ்க்க எம்மால் முடியாது. அதற்குரிய பணியை மக்கள் தான் முன்னெடுக்க வேண்டும்.

அரசின் ஆயுள் காலம் ஐந்து எனக் கூறப்பட்டாலும் கோட்டாபய ராஜபக்ஷ வின் ஆட்சியை அதற்கு முன்னரே மக்கள் கவிழ்த்தார்கள். எனவே, அரசின் ஆயுள் என்பது மக்களின் கைகளிலேயே உள்ளது.

நாடு முன்னால் உள்ள சவால்களை தேசிய மக்கள் சக்தி அரசு எதிர்கொண்டால் நல்லது. ஆனால் அதற்குரிய சாத்தியம் உள்ளதா என்பது சந்தேகமே." – என்றார்.

# கம்பஹாவில் யுவதி ஒருவர் கழுத்து நெரித்துக் கொலை!

## காதலனைத் தேடி பொலிஸார் வலைவீச்சு

இளம் யுவதி ஒருவர் கழுத்து நெரித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் கம்பஹா, கந்தானை பிரதேசத்தில் நேற்று இடம் பெற்றுள்ளது.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய யுவதியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி யுவதி, பெற்றோரும் சகோதரர்களும் நேற்று மாலை வெளியிடத்துக்குச் சென்ற வேளை வீட்டில் தனியாகத் தங்கியிருந்தபோது கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை தொடர்பில் யுவதியின் 25 வயது காதலன் மீது சந்தேகம் கொண்ட பொலிஸார், தலைமறைவாகியுள்ள அவரைத் தேடி வருகின்றனர்.






# தேர்தல் காலத்தில் அரசியல் செய்வோர் பின்னர் மக்களை மறந்து விடுகின்றனர்!

## பொறியியலாளர் உதுமாங் கண்டு நாபீர் குற்றச்சாட்டு

தேர்தல் காலங்களில் மட்டும் அரசியல் செய்ய வருவோர் பின்னர் மக்களை மறந்து விடுகின்றனர் என்று பொறியியலாளர் உதுமாங் கண்டு நாபீர் குற்றச்சாட்டியுள்ளார்.

இலங்கையின் நாலாபுறங்களிலும் பல சமூக சேவைகளை செய்து வரும் நாபீர் பௌண்டேசனானது அண்மையில் சம்மாந்துறை பிரதேசத்தில் இயங்கிவருகின்ற மகளிர் அமைப்புக்களை சந்தித்திருந்தது.

பௌண்டேசனின் ஸ்தாபக தலைவர் பொறியியலாளர் உதுமான்கண்டு நாபீரின் தலைமையில் சம்மாந்துறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தச் சந்திப்பில் நூற்றுக்கும் அதிகமானோர் மகளிர் அமைப்புக்களை பிரதி நிதித்துவப்படுத்திக் கலந்து கொண்டனர்.

இங்கு கலந்து கொண்டு உரையாற்றிய பொறியயலாளர் நாபீர் தொடர்ந்தும் அங்கு உரையாற்றும்போது,

தேர்தல் காலங்களில் மட்டும் அரசியல் செய்ய வரும் வியாபாரிகள் உங்களிடத்தில் வந்து ஆயிரம் அல்லது இரண்டாயிரங்களை கொடுத்து வாக்குகளைச்



சூறையாடிய பின் அவர்கள் மீண்டும் உங்களைப் பார்க்க வருவது அடுத்த தேர்தல் காலத்தில் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நாபீர் பௌண்டேசனானது அரசியல் அதிகாரம் இல்லாதிருக்கும் நிலையில் மகளிர் அமைப்புக்களை பிரதி நிதித்துவப்படுத்தி பல்வேறு நலன் பேணும் திட் டங்களைச் செய்து வருகின்றது.

நாங்கள் எவ்வளவு கஸ்டத்துக்கு மத்தியில் வாழ்ந்தாலும் எமது பிள்ளைகளுக்குக் கல்வியைக் கொடுத்து அவர்களைச் சமுதயத்தில் உருவாக்க வேண்டிய கட்டாய தேவைப்பாடும் எங்களுக்கு இருக்கின்றது. கல்வியை எமது பிள்ளைகளுக்கு கொடுப்பதைக் காசு சம்பாதிக்கும் குறிக்கோளாக மட்டும் கையில் எடுத்து செயற்படாமல் ஒரு படித்த சமூதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கான அடித்தளமாக இருக்க வேண்டும்.

அது மார்க்க கல்வியாக இருந்தாலும் சரி, உலகக் கல்வியாக இருந்தாலும் சரி அதனை நாங்கள் எமது பிள்ளைகளுக்கு கொடுப்பது எமது கடமையாகும். அதே போன்று தேர்தல் காலங்களில் உங்களிடத்தில் வாக்குப் பிச்சை கேட்டு வரும் வியாபாரிகளுக்கும் நீங்கள் சிறந்ததொரு அரசியல் கலாச்சாரமிக்க அரசியல் கல்வியைக் கொடுக்கும் அல்லது அவர்களை தெளிவுபடுத்துகின்ற சமூதாயமாக மாற வேண்டும்.

குறித்த மகளிர் அமைப்புக்களுடனான சந்திப்பில் பிரதேசத்து மகளிர் அமைப்புக்கள் நாபீர் பௌண்டேசனுடன் கைகோர்த்து எதிர்காலத்தில் நாபீர் பௌண்டேசன் முன்னெடுக்கும் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.- என்றார்.

## தந்தை,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான சம்பவத்தில் தந்தை, தாய் மற்றும் மகள் ஆகிய மூவர் உயிரிழந்துள்ளனர்.

குடும்பத் தகராறு முற்றிய நிலையில், கணவனால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தீ வைப்புச் சம்பவத்தில் 43 வயதுடைய சமன் அநுருத்த பிரதீப்பிரிய (தீ வைத்தவர்), அவரது மனைவி பிரபாஷா சந்தமாலி (வயது 36), 13 வயதுடைய மகள் டிமல்கா ஜயஷானி பிரதீப்பிரிய ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

பொலிஸ் விசாரணைகளின்படி, உயிரிழந்த நபர் அடிக்கடி மது அருந்திவிட்டு தனது மனைவிக்குத் துன்புறுத்தல் கொடுத்து வந்துள்ளார். இது தொடர்பாக ஏற்கனவே பல தடவைகள் பொலிஸில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தகராறுகள் காரணமாக, மேற்படி மனைவி தனது மூன்று பிள்ளைகளுடன் படிகாரமடுவ பகுதியில் உள்ள அவரது தாயாரின் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இன்று அதிகாலை 2 மணியளவில்




அந்த வீட்டுக்குள் நுழைந்த கணவர், அங்கிருந்தவர்கள் மீது பெற்றோல் ஊற்றித் தீ வைத்துள்ளார்.

தீ பரவிய வேளையில் வீட்டினுள் மனைவி, அவரது தாயார் மற்றும் இரு மகள்கள் இருந்துள்ளனர். அந்த நேரத்தில் வீட்டுக்கு வெளியே இருந்த 20 வயதுடைய மகன், தீப்பிழம்புகளுக்கு மத்தியில் தனது தாய் மற்றும் சகோதரிகளைக் காப்பாற்றப் போராடியபோது அவரும் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தீ வைத்தவரும், அவரது 13 வயதுடைய மகளும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

படுகாயமடைந்த நிலையில் தீ வைத்தவரின் மனைவி பிரபாஷா சந்தமாலி (வயது 36), மனைவியின் தாயார் கமலாவதி (வயது 66 - ஓய்வுபெற்ற ஆசிரியை), 15 வயதுடைய மூத்த மகள், 20 வயதுடைய மகன் ஆகியோர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும், மனைவி சிகிச்சை பல னின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலென்பிந்துனுவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சட்டவிரோத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரவமொன்றே இந்த மரணங்களுக்குக் காரணம் எனத் தற்போது சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

வென்னப்புவ, வாய்க்கால், தம்பரவில பகுதியில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் தொழிலாளர்கள் ஐவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் இன்று காலை பதிவாகியுள்ளது.

இவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு மதுபானம் எனக் கருதப்படும் திரவத்தை உட்கொண்டுள்ளனர்.

அதன் பின்னர் அடிக்கடி அவர்களுக்கு உடல்நலக் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன.

அவர்களில் இருவர் இன்று காலை தொழிற்சாலையில் உள்ள அறை ஒன்றில் உயிரிழந்த கிடந்த நிலையில், மேலும் மூவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், தொழிற்சாலைக்கு அருகிலுள்ள மற்றொரு வீட்டில் இருந்த ஒருவரும் இன்று காலை மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

இன்று காலை அதே பகுதியில் உள்ள வாகனம் பழுது பார்க்கும் கடை ஒன்றில் மேலும் மூன்று பேருக்கு நோய் அறிகுறிகள் வெளிப்பட்டன என்றும், அவர்கள் மூவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது இருவர் பின்னர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது.

வென்னப்புவ பொலிஸார் இந்த உயிரிழப்புக்கள் குறித்து மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு, தற்போது சட்டவிரோத மதுபானம் அருந்தியதே இந்த உயிரிழப்புக்களுக்கு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.




# குப்பைப் பிரச்சினைக்கு எதிராக பொகவந்தலாவவில் ஆர்ப்பாட்டம்

**(பொகவந்தலாவ நிருபர் எஸ். சதீஸ்)**

பொகவந்தலாவ நகரில் காணப்படும் குப்பைகளைச் சேகரிக்க நோர்வூட் பிரதேச சபை அதிக வரி அறவிடுதாகத் தெரிவித்து பொகவந்தலாவ வர்த்தகர்கள் இன்று செவ்வாய்கிழமை காலை ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். பொகவந்தலாவ வர்த்தக நிலையங்களில் உள்ள அனைத்து வர்த்த நிலையங்களையும் மூடி இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 200 பேர் கலந்து கொண்டனர். சுமார் ஒரு மணி நேரம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொகவந்தலாவ பஸ் நிலையத்துக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டமானது பிரதான நகரம் ஊடாக செல்வ கந்த சந்திவரை சென்று மீண்டும் பேரணியாக மீண்டும் பொகவந்தலாவ தண்டாயுதபாணி ஆலயம் முன்பாக பேரணி வந்தடைந்தது.

பொகவந்தலாவ நகரப் பகுதியில் நாளாந்தம் சேகரிக்கப்படும் குப்பைகளை நோர்வூட் பிரதேச சபை சேகரிப்பதற்கு அதிகூடிய வரியைக் கோருவதாக வர்த்தக நிலைய உரிமையாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இதேவேளை, நகரப் பகுதியில் உள்ள சேகரிக்கப்படும் குப்பைகளுக்கும் நாம் பெறும் தண்ணீருக்கும் நோர்வூட் பிரதேச சபைக்கு நாங்கள் வருடா வருடம் வரிப்பணம் செலுத்தி வருகின்றோம்.

தற்பொழுது பொகவந்தலாவ நகரில் குவியும் குப்பைகளைச் சேகரிக்க நலாந்தம் 200 ரூபாவை மேலும் செலுத்துமாறு நோர்வூட் பிரதேச சபையின் தலைவர் கோருகிறார்.

ஆனால் தாம் ஒருபோது குப்பைக்கான வரிப்பணத்தை செலுத்த போவதில்லை என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, எமது பிரச்சினைகளைத் தொடர்பாக நாட்டின் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டக் காரர்கள் தெரிவிக்கின்றனர்.

“எடுக்காதே எடுக்காதே குப்பை வரி எடுக்காதே”, “கட்டமாட்டோம் கட்டமாட்டோம் குப்பைக்கான வரியை கட்டமாட்டோம்”, “நாங்கள் செலுத்தும் வரிக்கு என்ன பயன்”, “மேலும் ஒரு வரிச் சுமையா குப்பைக்கு” போன்ற பாதைகளை ஏந்திய வாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.



# திருவாசக முற்றோதல்

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.15 மணி தொடக்கம் நண்பகல் 12 வரை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

அத்துடன் 2025 ஆம் ஆண்டு ஆலய மஹோற்சவ காலத்தில் இடம் பெற்ற தெய்வீக கலை நிகழ்வில் பங்கு கொண்ட மாணவர்களுக்கும் அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்களுக்குமான கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது. நிகழ்வின் இறுதியில் மகேஸ்வர பூசை இடம்பெற்று அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பிற தலையீடு ஏன்?

“தையிட்டி திஸ்ஸ விகாரை மற்றும் அங்குள்ள மக்களின் காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு மிக விரைவில் தீர்வு காணப்படும். அத்துடன், இவ் விவகாரத்தில் அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் செயற்படாது காணியின் உரிமையாளர்கள், பொறுமை காக்க வேண்டும். தையிட்டியை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் நோக்கம் எமக்குக் கிடையாது. தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்ட எதிர்க் கட்சியினரும் இந்த விவகாரத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதை நிறுத்த வேண்டும். இந்தப் பிரச்சினைக்கு மேற்படி இரு தரப்புகளும் பேச்சு நடத்தித் தீர்வுகாண வேண்டும். இது இலகுவான காரியம். எமது அரசு இந்த விடயத்தில் ஆழ்ந்த கரிசனை செலுத்தியுள்ளது. இரு தரப்புகளும் இணக்கத்துக்கு வருவதற்கான வழிவகைகளை அரசின் விசாரணைக் குழு செய்யும்.”

- இவ்வாறு திருவாய் மலர்ந்திருக்கின்றார் நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார.

அவருக்கு சில விடயங்களை தவறாது சுட்டிக் காட்டுவது இந்த சமயத்தில் முக்கியமாகின்றது.

✯ தவறுதலாக அல்லது மாறி இந்தத் தையிட்டி திஸ்ஸ விகாரை தற்போதைய இடத்தில் அமைக்கப்பட்டு விடவில்லை.

✯ தமிழர்களின் தாயகமான வடக்கு கிழக்கு எங்கும் தங்களுடைய மேலாதிக்கத்தை நிலை நிறுத்தும் அடையாளமாக பௌத்த - சிங்கள மேலாதிக்கம் புத்தர் சிலைகளையும், விகாரைகளையும், பௌத்த வழிபாட்டு இடங்களையும் நிறுவிவரும் திட்டமிட்ட நடவடிக்கையில் ஓர் அங்கமாகவே இந்த விகாரை இந்த இடத்தில் வல்வந்தமாக அமைக்கப்பட்டது.

✯ அதுவும் இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் மக்களை அவர்களின் பூர்வீக இடங்களில் இருந்து துரத்திக் கலைத்து விட்டு, அடாவடித்தனமாக கைப்பற்றி, ஆக்கிரமித்து இராணுவக் கட்டுப்பாட்டில் மூடி மறைத்து வைத்துக்கொண்டு, பிரதேச ஜனப்பரம்பலுக்கு மாறாக இத்தகைய கட்டுமானங்கள் பல தமிழர் தேசமெங்கும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தமிழர்களின் செழிப்புமிக்க - வளமான - காணிகளில், நிலங்களில் இராணுவத்தினர் பலவந்தமாகப் பயிர்ச்செய்கைகளை முன்னெடுக்கும் நிலைமை வரை இந்த ஆக்கிரமிப்பும் அடாவடி அட்டூழியமும் தொடர்கின்றன.

✯ அதன் உச்சமே தையிட்டி விகாரை கட்டுமானமாகும். உள்ளூராட்சி நிர்வாகத்தின் அனுமதியின்றி, எச்சரிக்கைகள் நடவடிக்கைகளை மீறி, ஆட்சித் தரப்பின் காவல்துறை பாதுகாப்போடு, திட்டமிட்டு இந்த நடவடிக்கை சட்ட மீறலாக முன்னெடுக்கப்பட்டது.

✯ அந்தக் காரணத்தினால்தான் காணி உரிமையாளர்களுக்கு அப்பால் பொதுமக்களும் அரசியல்வாதிகளும் இவ்விவகாரத்தில் தலையிடும் நிலைமை வந்தது.

✯ இந்தப் பிரச்சினைக்கான தீர்வு எதுவாயினும், முதல் விடயம், அடாவடித்தனமாக - வேண்டுமென்றே - அதிகாரப் பின்புல வலுவோடு - எதேச்சாதிகாரப் போக்கில் - இந்த கட்டுமானம் முன்னெடுக்கப்பட்டது என்ற உண்மையை மக்கள் மத்தியில் ஒப்புக்கொண்டு அதிலிருந்துதான் தீர்வு நோக்கிய எந்த நகர்வும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

✯ நடந்தேறிய அட்டூழியங்களையும் அடாவடித்தனத்தையும் மூடி மறைத்துக்கொண்டு நல்லிணக்கம், தீர்வு என்று பேசுகின்ற கொழும்பின் வழமையான பரவணிப் போக்கில்தான் இப்போதும் இந்த விடயத்தை இந்த அரசும் கையாளுகின்றது.

-அதனால் தான் பிரதேச மக்களும், அரசியல்வாதிகளும், விவகாரத்துக்குள் தலையிட வேண்டிய தவிர்க்க முடியாத கட்டாய சூழ்நிலை வந்துள்ளது என்பதை நீதி அமைச்சரும் அவரது அரசும் உணர்ந்து கொள்ள வேண்டும். இந்த உண்மைகள் தெரிந்திருந்தும் தெரியாமை போல நடித்துக் கொண்டு பேசுவதால் விவகாரத்துக்கு நீதி, நியாயமான தீர்வு கிட்டாது என்பதுதான் உண்மை.



# கொய்யாவாடி அரபா நகரில் தாய் - சேய் நிலையம் திறப்பு

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

நுரைச்சோலை கொய்யாவாடி அரபா நகர் கிராமத்தில் புதிய தாய் சேய் பராமரிப்பு நிலையம் நேற்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்தத் திறப்பு விழாவின் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஜே.எம்.பைசல் கலந்து கொண்டு இதனை திறந்து வைத்தார்.

கௌரவ அதிதியாக கற்பிட்டி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எஸ்.எம். றிகாஸ் கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் ஏ.ஆர்.முஸம்மில் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



# தொகுப்பு நூல் வெளியீட்டு விழா!

(ஹஸ்பர் ஏ.எச்.)

வைத்தியர் அருமைநாதன் ஸதீஸ் குமார் எழுதிய முத்தமிழறிஞர் புண்ணியமூர்த்தி செல்லக்குட்டியின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திருகோணமலை மாநகர சபை பொது நூலக மண்டபத்தில் சம்பூர் தமிழ்க்கலாமன்ற உறுப்பினர் கவிஞர். ம. சச்சிதானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் முதன்மை அழைப்பாளராக முன்னாள் அதிபர் கலாபூஷணம் க. ஜெயநாதனும், கௌரவ அழைப்பாளராக வாசல் வாசகர் வட்டத்தின் தலைவர் கவிஞர் அ . அச்சுதன் மற்றும் எண்ணம்போல் வாழ்க்கை கலை மன்றத்தின் தலைவர் கனக. தீபகாந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விழாவில் எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.



# கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக வாகீஷன்!

கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக பி.வாகீஷன் நேற்று திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

கிழக்கு ஆளுநர் ஜயந்தலால் ரட்ணசேகரவிடமிருந்து நியமனத்தை பெற்றுக்கொண்டார்.

வாகேஷன் முன்னர் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சந்நிதியான் ஆச்சிரமத்தால் 5 லட்சம் ரூபா பெறுமதியில்

# கரவெட்டி தேவரையாளி பாடசாலைக்கு குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம்!




யாழ்ப்பாணம், கரவெட்டி, தேவரையாளி இந்துக் கல்லூரியின் கோரிக்கைக்கு அமைவாக, சந்நிதியான் ஆச்சிரமத்தால் 5 லட்சம் ரூபா பெறுமதியில் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

500 மாணவர்கள் கற்கும் இந்தப் பாடசாலையில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக இது வழங்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கள்கிழமை, ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் செ.மோகனதாஸ் சுவாமிகளால் உத்தியோகபூர்வமாக இது கையளிக்கப்பட்டது.

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

இருபாலைதெற்கு கமக்காரர்கள் அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு இருபாலை தெற்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கமக்காரர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.




## வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட

# அருட்பணி பஸ்ரியான் அடிகளாரின் 41 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் நிலவிய யுத்த காலத்தில் மன்னார் மறை மாவட்ட வங்காலை பங்கில் அன்று பங்கு தந்தையாக இருந்த அருட்பணி மேரி பஸ்ரியான் அடிகளார் படுகொலை செய்யப்பட்டு 41 ஆவது நினைவேந்தல் இன்று செவ்வாய்கிழமை வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் மிகவும் உணர்ச்சி பூர்வமாக இடம் பெற்றது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்து வந்ததுடன் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வந்த அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டார்.

1985 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி இவர் வங்காலை புனித ஆனாள் பங்குத் தளத்தில் தனது அறையில் இருக்கும்போதே அன்று இரவு படுகொலை செய்யப்பட்டார்.

இந்தத் தினத்தை வங்காலை மக்கள் ஒன்று சேர்ந்து வருடந்தோறும் நினைவேந்தல் செய்யும் அடிப்படையில் இந்த வருடமும் 41 ஆவது நினைவேந்தலை இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் பங்குத் தந்தை லக்கோன் பிகிராடோ அடிகளாரின் ஒழுங்கமைப்பில் பங்கு மேய்ப்புப் பணி சபையின் எற்பாட்டில் நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் அருட் கலாநிதி மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் இந்த நினைவேந்தல் கூட்டத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அமரர் பஸ்ரியன் அடிகளாரின் உருவச் சிலைக்கு முன்னால் பல நூற்றுக் கணக்கான மக்களும் அருட் பணியார்கள் துறவிகள் ஒன்றுகூடி அமரர் அருட்பணி மேரி பஸ்ரியான் அடிகளாரின் உருவச் சிலைக்கு பங்கு தந்தை அருட் பணி லக்கோன் பிகிராடோ அடிகளார் மலர்மலை அணிவித்ததுடன் அவருடன் இருந்து உயிர்நீத்தவர்களையும் நினைவு கூர்ந்து மன்னார் ஆயரால் சுடர் ஏற்றப் பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்தவர்கள் மலர் தூப அஞ்சலியைச் செய்தனர்.













# மட்டக்களப்பில் மீண்டும் பருவமழை!

(மட்டக்களப்பு நிருபர்)

வடகீழ் பருவப் பெயற்சி மழை வீழ்ச்சி மட்டக்களப்பு மாவட்டத்தில் மீண்டும் ஆரம்பித்துள்ளது. கடந்த வருடம் இறுதி வரையில் பெய்து வந்த மழை வீழ்ச்சி கடந்தவாரம் சற்று ஓய்ந்திருந்த நிலையில் இன்று செவ்வாய்கிழமை அதிகாலை முதல் பலத்த மழை பெய்து வருவதை அவானிக்க முடிகின்றது.

இந்த நிலையில் மட்டக்களப்பு நகரில் 39.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் நவகிரிப் பகுதியில் 55 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் தும்பங்கேணிப் பகுதியில் 36 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் உன்னிச்சைப் பகுதியில் 33 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் உறுகாமம் பகுதியில் 26 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் மைலம்பாவெளி பகுதியில் 31 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் வாகரைப் பகுதியில் 38 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் கல்முனைப் பகுதியில் 19.5 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் இன்று செவ்வாய்கிழமை காலை 8.30 மணிவரையில் பதிவாகியுள்ளது.

2025 ஆம் ஆண்டு முழுவதும் 1863.4 மழைவீழ்ச்சி கிடைக்கப்பெற்றுள்ளது என்று மட்டக்களப்பு வானிலைய அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் மட்டக்களப்பில் அமைந்துள் மிகப்பிரதான குளங்களின் நீர்மட்டங்களும் வெகுவாக உயர்ந்துள்ளன.

உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 30 அடி 3 அங்குலம், நவகிரிக் குளத்தின் நீர்மட்டம் 28 அடி 8 அங்குலம், தும்பற்கேணிக் குளம் 15 அடி, உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 13 அடி 9 அங்குலம், வாகனேரிக் குளத்தின் நீர்மட்டம் 17 அடி 2 அங்குலம், கட்டுமுறிவுக் குளத்தின் நீரமட்டம் 11 அடி 7 அங்குலம், கித்துள் வெவக் குளத்தின் நீர்மட்டம் 11 அடி 7 அங்குலம், வெலிக்காக்கண்டிய குளத்தின் நீர்மட்டம் 13 அடி 5 அங்குலம், வட முனைக் குளத்தின் நீர்மட்டம் 12 அடி 6 அங்குலமாக உயர்ந்துள்ளது என்று அந்தக் குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் களுவாஞ்சிகுடி, வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு, உள்ளிட்ட பல பிரதேசங்களிலுள்ள கிராமியக் குளங்கள் முற்றாக நிரம்பியுள்ளன.

இதேவேளை முறையான வடிகான் வசதியின்மையால் கிராமங்களிலுள்ள உள்வீதிகள், மற்றும் குடியிருப்புக்களிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளது. இதனால் மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.



# முதலைகளின் நடமாட்டம் காரைதீவில் அதிகரிப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவில் உள்ள மாவடிப்பள்ளி ஆறு, கரைவாகு வட்டை ஆறு ஆகியவற்றில் முதலைகளின் நடமாட்டம் அண்மைக் காலமாக அதிகமாகக் காணப்படுகிறது.

அதிக எண்ணிக்கையில் இராட்சத முதலைகள் நடமாடுவதால் பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இந்தப் பிராந்தியத்தில் முதலை இழுத்து ஒருவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இரவு வேளையில் தனியாக இப்பாதையில் பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரவுவேளையில் கரைக்குவரும் முதலைகள் தனியாகச் செல்வோரை ஆற்றுக்குள் இழுத்துச் செல்லும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பாதை மிகவும் மோசமாக காணப்படுவதால் இரவுப் பயணத்தை தவிர்ப்பது மிகவும் பாதுகாப்பாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருகோணமலையில் பட்டத் திருவிழா!

(ஹஸ்பர் ஏ.எச்.)

ஒரு கோடி பெண் எழுச்சி பிரச்சாரத் திட்டத்தின் ஓர் அங்கமாக E - wings சுயாதீன பெண்கள் சிறுவர் மையத்தின் ஏற்பாட்டில் அதன் இயக்குநர் காயத்திரி நளினகாந்தன் தலைமையில் திருகோணமலை கடற்கரையில் பட்டத் திருவிழா நடைபெற்றது. இதன்போது திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்கு உட்பட்ட மகளிர் சங்கங்கள் கலந்துகொண்டன.

திருகோணமலை மாநகர சபை முதல்வர் க. செல்வராசா பிரதம விருந்தினராகவும் மாநகர சபை செயலாளர் ஜெய விஸ்ணு மற்றும் உப்புவெளி பிரதேச சபை உறுப்பினர் கி.விஜித்தா, இந்த அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்திருமதி கு.குமுதா ஆகியோரும்கலந்து கொண்டனர்.







# பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை: ஆசிரியர் போராட்டம் தொடர்வதாக அறிவிப்பு

பாடசாலை கல்வித் துறை அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படாததால், போராட்டம் தொடரும் என்று இடைநிலை ஆசிரியர்கள் அறிவித்துள்ளனர்.

சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன் வைத்து, இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர் இயக்கம் (எஸ்எஸ்டிஏ), கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி முதல் தொடர் போராட்டங்களை நடத்திவருகிறது. இதில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

தொடர்ந்து, 11 ஆவது நாளாக ஆசிரியர்கள் சென்னை எழும்பூரில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

அரையாண்டு விடுமுறை முடிந்து நேற்று பாடசாலைகளும் திறக்கப்பட்டன. எனினும், ஆசிரியர்கள் பலர் பணிக்குச் செல்லாமல் போராட்டத்தை தொடர்ந்தனர். இதனால் மாற்று ஏற்பாடுகளை அனைத்து மாவட்டக் கல்வி அலுவலகங்களும் ஏற்பாடு செய்திருந்தன. எனினும், சில பகுதிகளில் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் பணிகள் பாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

# லடாக்கில் பனிப்பொழிவு; விமான சேவைகள் ரத்து!




லடாக்கில் நிலவி வரும் கடுமையான பனிப்பொழிவு காரணமாக, லே விமான நிலையத்தில் விமான சேவைகள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனால், சுற்றுலாப் பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.


இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கையின்படி, லேயில் -9.6 பாகை செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 0.6 சென்டிமீட்டர் பனிப்பொழிவு நிலவியுள்ளது.

கடும் பனிப்பொழிவு காரணமாகவே விமான நிலையத்தில் அனைத்து விமானங்களின் சேவைகளும் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, லேவில் நிலவும் பனிப்பொழிவு காரணமாக, விமானச்சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன எனவும் இதனால், காத்திருப்பு நேரம் அதிகரிக்கலாம் எனவும் இது குறித்து இண்டிகோ நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு கூறியுள்ளது.

வானிலையை இயல்புநிலை திரும்பியவுடன் மீண்டும், சேவைகள் தொடரும் எனவும் விமான நிலையத்திற்கு வருவதற்கு முன்பாக, பயணிகள் தங்கள் விமானங்களின் நிலைகளை இணைய தளங்கள் மூலம் அறிந்து கொள்ளுமாறும் இண்டிகோ நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.



# சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க ஆட்சியை எப்படியாவது நாங்கள் ஒழித்துக் கட்டுவோம்

## அமித் ஷா ஆவேசம்

"சட்டப்பேரவைத் தேர்தலில் எப்பாடு பட்டாவது, எப்படியாவது தி.மு.க. ஆட்சியை ஒழித்துக் கட்டுவோம். இந்தியாவில் ஊழல் நிறைந்த கட்சி, ஆட்சி என்றால், அது தமிழகத்தின் தி.மு.க. ஆட்சி தான்."

– இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் 'தமிழகம் தலைநிமிர தமிழனின் பயணம்' என்ற தலைப்பில் கடந்த ஒக்டோபர் 12 ஆம் திகதி பிரச்சாரத்தை தொடங்கினார். பயணத்தின் நிறைவு விழா பொதுக்கூட்டம் புதுக்கோட்டை பள்ளத்திவயல், கருவேப்பிலான் கேட் பகுதியில் நேற்று மாலை நடைபெற்றது.

இதில் பங்கேற்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உரையாற்றுகையில்,

"பிரதமர் மோடி தலைமையின் கீழ் அணிவகுத்து, பாரதத்தின் வளர்ச்சிப் பயணத்தில், இந்த நிறைவு பயணம் வாயிலாக நாம் பங்கு பெறுவோம் என இந்த மாபெரும் அவையின் வாயிலாக தமிழக மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறேன். தமிழகத்தில் 2026 ஏப்ரலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி மலரும். பா.ஜ.க, அ.தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சிகள் சேர்ந்து வலுவான கூட்டணி அமைத்து ஆட்சி அமைக்கப் போகிறோம்.

எப்பாடுபட்டாவது, எப்படியாவது தி.மு.க. ஆட்சியை ஒழித்துக் கட்டுவோம். இந்தியாவில் ஊழல் நிறைந்த கட்சி, ஆட்சி என்றால், அது தமிழகத்தின் தி.மு.க. ஆட்சி தான். தி.மு.க. கடந்த தேர்தலின்போது தெரிவித்த வாக்குறுதி களில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றவில்லை. தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. மு.க.ஸ்டாலினின் ஒரே நோக்கம், தனது மகன் உதயநிதியை முதல்வராக்குவது மட்டும் தான்.

தமிழகத்தில் ஒரு குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்டும் நேரம் வந்துவிட்டது. கருணாநிதிக்கு பிறகு ஸ்டாலின், அவருக்கு பிறகு உதயநிதி என திட்டம் போடும் ஸ்டாலின் கனவு நிறைவேறாது. இந்த முறை 2026 இல் கண்டிப்பாக தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி தான் அமையப் போகிறது. அ.தி.மு.க – பா.ஜ.க. கூட்டணி இயற்கையான வெற்றிக் கூட்டணி. 1998, 2019, 2021 தேர்தல்களில் இணைந்தே களம் கண்டோம். 2024 மக்களவைத் தேர்தலில் தனித்தனியாக தேர்தலை சந்தித்தோம் என்றாலும், இருகட்சிகளின் மொத்த வாக்குகளை கணக்கிட்டால் 26 தொகுதிகளில் வெற்றி பெற்றிருப்போம்.

தேசிய ஜனநாயக கூட்டணி அரசு தமிழகத்துக்கு எதிரானது என ஸ்டாலின் பொய் பரப்புரை செய்கிறார். ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் தேர்வுகளை தமிழில் எழுதலாம் என அறிவித்தது மோடி அரசு தான். ரயில் நிலையங்களில் தமிழில் அறிவிப்பு, வாராணசியில் தமிழுக்கு இருக்கை, 13 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்பு, ஃபிஜி தீவுகளில் தமிழை கற்பிக்க, கற்றுக்கொள்ள வசதி போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்ததும் பா.ஜ.க. ஆட்சியில் தான். தமிழரான சி.பி.ராதாகிருஷ்ணனை துணை ஜனாதிபதி பதவியில் அமர வைத்து அழகு பார்த்ததும் மோடி தலைமையிலான அரசு தான்.

தி.மு.க. அரசு ஊழலுக்கான எடுத்துக்காட்டாக, அடையாளமாக மாறிவிட்டது. ஒரு அமைச்சர் சிறைச்சாலை சென்ற பிறகும் 248 நாள்கள் வரை அமைச்சராக தொடர்ந்தார். ஒரு அமைச்சர் வேலைக்குப் பணம் வாங்கி ஊழலில் சிக்கியிருக்கிறார். கறுப்புப் பணத்தை சலவை செய்யும் வேலையில் ஒருவரது பெயர் அடிபடுகிறது. மணல் அள்ளும் ஊழலில் ஒருவரது பெயர் உள்ளது. நிலக்கரி ஊழலில் ஒருவரது பெயர் உள்ளது. இத்தனை ஊழல்கள் நிறைந்த அமைச்சர்கள் அடங்கிய அமைச்சரவையை வைத்துக் கொண்டு தமிழகம் வளர்ச்சி காண முடியுமா?" என்று தெரிவித்துள்ளார்.

# நான் ஒரு நாட்டின் ஜனாதிபதி என்னை சிறைபிடித்துவிட்டனர்

## நியூயோர்க் நீதிமன்றத்தில் மதுரோ தெரிவிப்பு




வெனிசுலா நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மதுரோ கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் நியூயோர்க் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அப்போது தன் மீதான குற்றச்சாட்டுகளைத் திட்டவட்டமாக மறுத்த மதுரோ, தான் ஒரு நிரபராதி என்று தெரிவித்தார். மேலும், ஜனாதிபதியாக இருந்த தன்னை சிறைபிடித்துவிட்டனர் எனவும் கூறினார்.

வெனிசுலாவில் கடந்த 15 ஆண்டுகளாக ஆட்சி செய்தவர் மதுரோ. அமெரிக்காவுக்குப் போதைப் பொருளை வர மதுரோ தான் காரணம் என டிரம்ப் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வந்தார். இந்தச் சூழலில் தான் அமெரிக்கப் படைகள் கடந்த சனிக்கிழமை அவரை கைது செய்தது. மேலும், மதுரோ அமெரிக்காவுக்கு நாடுகடத்தப்பட்டார். அமெரிக்கா சிறைகளில் அடைக்கப்பட்டார்.

சனிக்கிழமை அவர் கைது செய்யப்பட்ட நிலையில், நேற்று திங்கள் கிழமை அவர் நியூயோர்க் வளாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். ட்ரம்ப் அரசு அவர் மீது போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள நிலையில், அது தொடர்பான வழக்குகள் நடைபெற்றது.. இலங்கை நேரப்படி திங்கள்கிழமை நள்ளிரவில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

நியூயோர்க் நீதிபதி முன்பு ஆஜரான நிக்கோலஸ் மதுரோ, தனது கைதுக்கு எதிர்ப்பு தெரிவித்தார். தன்னை வெனிசுலா நாட்டின் ஜனாதிபதி என்று அறிமுகப்படுத்திக் கொண்ட மதுரோ, தன் மீது அமெரிக்க அரசு சுமத்திய போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டுகளில் உண்மை இல்லை என்றும் தான் நிரபராதி என்றும் கூறினார்.

நீதிமன்றத்தில் ஸ்பானிஷ் மொழியில் பேசிய மதுரோ, “என்னைச் சிறை பிடித்து விட்டனர். நான் வெனிசுலா ஜனாதிபதி” என்று குறிப்பிட்டார். பின் வழக்கு விசாரணையின்போது குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த மதுரோ, “நான் நிரபராதி. நான் குற்றவாளி அல்ல. நான் ஒரு கண்ணியமான மனிதன். என் நாட்டின் ஜனாதிபதி” எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

# மதுரோ கைது செய்யப்பட்டதால் கியூபா விரைவில் வீழ்ச்சி அடையும்



## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ கைது செய்யப்பட்டுள்ள நிலையில், கியூபாவும் வீழ்ச்சி அடைய தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய டொனால்ட் ட்ரம்ப்,

“வெனிசுலா தலைவர் நிகோலஸ் மதுரோ அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கியூபா வீழ்ச்சியடைய தயாராக உள்ளது.

ஏனெனில், பாதுகாப்பு எண்ணெய்க்காக கியூபா இனி வெனிசுலாவை நம்பியிருக்க முடியாது. மதுரோ பதவி நீக்கப்பட்டிருப்பதாலும், நட்பு நாடுகளுக்கு நிதி உதவி வழங்கும் வெனிசுலாவின் திறன் சரிந்துள்ளதாலும் கியூபா கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

கியூபாவுக்கு எதிராக அமெரிக்கா நடவடிக்கை எதையும் எடுக்கத் தேவையில்லை. அது தானாகவே வீழ்ந்துவிடும் என்று நினைக்கிறேன். அது வீழ்ச்சி அடைந்து கொண்டிருப்பதுபோல் தெரிகிறது. அது முழுமையாக வீழ்ச்சி அடையும்.” என தெரிவித்தார்.

நிகோலஸ் மதுரோ அதிகாரத்தில் தொடர்வதற்கும், அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் கியூபா முக்கிய பங்கினை வகித்ததாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

“மதுரோவை அதிகாரத்தில் வைத்திருக்க கியூப பாதுகாப்புப் படைகள் முக்கிய பங்கு வகித்தன. கியூப உளவாளிகள் இதற்கான பணிகளை திறம்பட நடத்தினர். மதுரோவுக்கு தனிப்பட்ட பாதுகாப்பை வழங்கியதும், அரசாங்கத்துக்குள் இருப்பவர்களின் விசுவாசத்தை கண்காணித்ததும் கியூபர்கள்தான்.

மதுரோவுக்கு வெனிசுலா மெய்க்காப்பாளர்கள் பாதுகாப்பை அளிக்கவில்லை. கியூப மெய்க்காப்பாளர்கள் தான் இருந்தனர்” என மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

வெனிசுலாவில் நடந்த அமெரிக்க நடவடிக்கையின்போது 32 கியூப இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டதை கியூப அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது.

வெனிசுலாவின் கோரிக்கையின் பேரிலேயே இந்த அதிகாரிகள் பணியமர்த்தப்பட்டனர் என கியூப அரசு ஊடகங்கள் தெரிவித்தன. மேலும், இரண்டு நாள்கள் தேசிய துக்க தினமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெனிசுலாவில் கியூபர்கள் கொல்லப்பட்டதை டொனால்ட் ட்ரம்ப்பும் உறுதிப்படுத்தினார். அதேநேரத்தில், அமெரிக்க தரப்பில் எந்த உயிரிழப்பும் இல்லை என்றும் அவர் கூறினார்.

கொலம்பியாவும் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாகத் தெரிவித்த ட்ரம்ப், கொகைன் போதைப் பொருளைத் தயாரித்து அமெரிக்காவுக்கு விற்க விரும்பும் ஒரு மோசமான மனிதரால் அந்த நாடு ஆளப்படுவதாக விமர்சித்தார்.

அதோடு, இனி நீண்ட காலத்துக்கு அந்த நாடு இதைச் செய்ய முடியாது என்றும் ட்ரம்ப் கூறினார். போதைப் பொருள் கடத்தல் வலையமைப்புகளுக்கு எதிராக அமெரிக்கா கடுமையான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் அடுத்த இலக்கு கிரீன்லாந்து; ட்ரம்ப்புக்கு ஃப்ரெட்ரிக் நீல்சன் எச்சரிக்கை!



தேசிய பாதுகாப்பு காரணங்களுக்காக தீவு தேசமான கிரீன்லாந்தை அமெரிக்காவுடன் இணைத்துக் கொள்வது அவசியம் என்று கூறியுள்ள ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புக்கு கிரீன்லாந்து பிரதமர் ஜென்ஸ் ஃப்ரெட்ரிக் நீல்சன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டென்மார்க்கின் தன்னாட்சி பிரதேசம் கிரீன்லாந்து. அங்கு ரேர் எர்த் மினரல்ஸ் எனப்படும் அரிதான கனிம வளங்கள் அதிகமாக இருக்கின்றன.

இந்நிலையில், தேர்தல் பிரசாரம் தொட்டே கிரீன்லாந்தை பாதுகாப்பு காரணங்களுக்காக அமெரிக்காவுடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி வருகிறார் டொனால்டு ட்ரம்ப்.

போதைப் பொருள் பயங்கரவாதத்தை அமெரிக்கா மீது ஏவிவிடுவதாக வெனிசுலா மீது குற்றஞ்சாட்டி வந்த ட்ரம்ப், அந்தப் பெயரில் வெனிசுலா நாட்டு பிரதமரை சிறைப்பிடித்துள்ளார். இந்நிலையில், தற்போது ட்ரம்ப் க்ரீன்லாந்து மீதான தனது வேட்கையை மீண்டும் பகிரங்கமாகத் தெரிவிக்க, அது தற்போது கவனம் பெற்றுள்ளது.

தனது பிரத்யேக விமானத்தில் இருந்து ட்ரம்ப் அளித்த அந்தப் பேட்டியில்,

“அமெரிக்க தேசத்தின் பாதுகாப்பு ரீதியாக கிரீன்லாந்து இப்போது மிக முக்கியப் புள்ளியாக இருக்கிறது. கிரீன்லாந்து முழுவதுமே ரஷ்ய மற்றும் சீன கப்பல்கள் உள்ளன. அதனால் பாதுகாப்பை உறுதி செய்ய இந்தப் பகுதியை அமெரிக்காவுடன் இணைப்பது அவசியம்.” என்று கூறியுள்ளார்.

இதுபோல் ட்ரம்ப் முன்னர் ‘தி அட்லாண்டிக்’ என்ற இதழுக்கு அளித்தப் பேட்டியிலும் கூறியிருந்தார். அப்போது அதற்கு டென்மார்க் நாட்டு பிரதமர், “கிரீன்லாந்தை ஆக்கிரமித்துக் கொள்ள விரும்புவதாக அமெரிக்கா சொல்வது முட்டாள்தனமானது. டென்மார்க் கட்டுப்பாட்டில் இருக்கும் மூன்று பகுதிகளில் எந்த ஒரு பகுதியினையும் இணைத்துக் கொள்ள அமெரிக்காவுக்கு உரிமை இல்லை.” என்றார்.

கடந்த ஞாயிறு இரவு கிரீன்லாந்து பிரதமர் ஜென்ஸ் ஃப்ரெட்ரிக் நீல்சன் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்த பதிவில்,

“இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். இன்னமும் அழுத்தம் தர வேண்டாம். மறைமுகமாகக் கூட உங்களின் ஆக்கிரமிப்பு எண்ணங்களைச் சொல்ல வேண்டாம். எப்படியாவது இணைத்துக் கொள்ளலாம் என்று கனவும் காண வேண்டாம். நாங்கள் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருக்கிறோம். ஆனால், இந்தப் பேச்சுவார்த்தை சரியான முறையில் நடக்க வேண்டும். சர்வதேச சட்டத்தை மதிப்பதாக இருக்க வேண்டும்.

கிரீன்லாந்து எங்கள் வீடு, எங்கள் பிராந்தியம். இனியும் அப்படித்தான் இருக்கும்,” என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தார்.

மேலும், “வரலாற்று ரீதியாக அமெரிக்காவுக்கு கிரீன்லாந்து நெருங்கிய கூட்டாளி. நாங்கள் பலமுற கிரீன்லந்து விற்பனைக்கு அல்ல என்று தெளிவாகத் தெரிவித்த பின்னரும் கூட ட்ரம்ப் மீண்டும் மீண்டும் இணைப்பு பற்றிப் பேசுவதும் சரியல்ல” என்றார் கிரீன்லாந்து பிரதமர் ஜென்ஸ் ஃப்ரெட்ரிக் நீல்சன்.



கனடா முரசு
பக்கங்கள் - 03
செவ்வாய்க்கிழமை 06/01/2026

## கனடியப் பிரதமர் கார்னி பிரான்ஸிற்கு விஜயம்



C3



# கனடாவுக்கு விடுக்கப்படும் ட்ரம்பின் மறைமுக எச்சரிக்கை

2025 - 26 காலப்பகுதியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மேற்கொண்ட நடவடிக்கைகள், உலக அரசியல் சமநிலையை அடியோடு மாற்றும் வகையில் அமைந்துள்ளதுடன், கனடா போன்ற அண்டை நாடுகளுக்கும் நேரடியான எச்சரிக்கையாக பார்க்கப்படுகின்றன என்று அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

வெனிசுலாவில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இராணுவ நடவடிக்கையின் மூலம், அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப்பட்டு அமெரிக்க சிறையில் அடைக்கப்பட்ட சம்பவம், ஒரு சுயாதீன நாட்டின் இறையாண்மையை முற்றாகப் புறக்கணித்த செயலாக கருதப்படுகிறது.

C2

# கனடாவின் பேரி நகரில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில் ஆயுதங்கள் மீட்பு

கனடாவின் பேரி நகரில், சந்தேகத்துக்கிடமான வெள்ளை நிற பிக்கப் வாகனத்தை பொலிஸார் நிறுத்தி சோதனை செய்த போது, துப்பாக்கி, பல்வேறு கத்திகள் மற்றும் கணிசமான அளவு கனடிய பணம் கைப்பற்றப்பட்டுள்ளன.

பேய்பீல்ட் வீதி மற்றும் க்ராவ் வீதி என்பனவற்றுக்கு அருகிலுள்ள ஒரு மேட்டுப் பகுதியில், அந்த வாகனம் திடீரென திரும்பியதை கவனித்த பொலிஸார், உடனடியாக வாகனத்தை நிறுத்தி சோதனை மேற்கொண்டனர்.

வாகன சோதனையின் போது, பல வகையான கத்திகள், 40-கலிபர் துப்பாக்கி ஒன்று, கணிசமான அளவு கனடிய பணம் என அனைத்தும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

இந்த சம்பவம் தொடர்பாக, 26 வயதுடைய டொரோண்டோவைச் சேர்ந்த ஆண் ஒருவர், 45 வயதுடைய டொரோண்டோவைச் சேர்ந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



தடை செய்யப்பட்ட துப்பாக்கியை வைத்திருத்தல், தடை செய்யப்பட்ட துப்பாக்கி வைத்திருப்பது குறித்து அறிவுடன் செயல்பட்டல், துப்பாக்கியை அலட்சியமாக வைத்திருத்தல், குண்டுகளுடன் துப்பாக்கி வைத்திருத்தல், ஆபத்தான நோக்கத்திற்காக ஆயுதம் வைத்திருத்தல், தடை செய்யப்பட்ட ஆயுதம் வைத்திருத்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் இந்த இருவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# தேவாலயத்திலிருந்து காணாமல் போன 200 ஆண்டுகள் பழமையான மணி மீட்பு








கனடாவின் நியூ பிரன்ஸ்விக் மாகாணத்தில் உள்ள ஒரு தேவாலயத்திலிருந்து காணாமல் போன 200 ஆண்டுகள் பழமையான மணி உடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்த மணி குறித்து விசாரணை நடைபெற்ற நிலையில், அதன் முடிவு பக்தர்களையும் சமூகத்தினரையும் பெரும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

ப்ரிட்ரிக்சன் நகரில் அமைந்துள்ள புனித பீட்டர்ஸ் அங்கிலிக்கன் தேவாலய வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த, 300 முதல் 400 பவுண்ட் எடையுள்ள வெண்கல மணி கடந்த வாரம் திருடப்பட்டது.

இந்த மணி பாதுகாப்பாக மீட்கப்படும் என்ற நம்பிக்கையில் இருந்த தேவாலய நிர்வாகத்துக்கும் பக்தர்களுக்கும், கிடைத்த தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திருடப்பட்ட மணி, அருகிலுள்ள ஒரு சாலையோர பள்ளத்தில் சுத்தியலால் உடைக்கப்பட்ட நிலையில் துண்டுகளாக கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மணி முழுமையாக அல்ல, உடைக்கப்பட்ட துண்டுகளாக மட்டுமே கிடைத்துள்ளது. சுத்தியலால் நொருக்கப்பட்டு வீதியோர பள்ளத்தில் வீசப்பட்டுள்ளது. இது உண்மையில் ஒரு மோசமான செயல் என அருட்தந்தை ரோஸ் ஹெப் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், வெள்ளிக்கிழமை பிற்பகலில் மணியின் சில பகுதிகள் மீட்கப்பட்டதாக உறுதிப்படுத்தியுள்ளது.

மீட்கப்பட்ட பகுதி பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மணியின் பல துண்டுகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று பொலிஸார் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவித்துள்ளனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் தகவல் உள்ளவர்கள் பொலிஸாரிடம் அறிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## கனடாவுக்கும்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உலகின் மிகப்பெரிய எண்ணெய் களஞ்சியங்களில் ஒன்றை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த ட்ரம்ப், சர்வதேச சமூகத்தின் எதிர்ப்பே இல்லாமல் தனது அதிகார எல்லைகளை விரிவுபடுத்தியதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

வெனிசுலாவின் எண்ணெய் உற்பத்தி சரிந்த காலத்தில், கனடாவின் எண்ணெய் அமெரிக்க மற்றும் வட அமெரிக்க சந்தைகளில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது.

ஆனால் இப்போது, கராகஸ் எண்ணெய் குழாய் முழுமையாக அமெரிக்கக் கட்டுப்பாட்டில் இருப்பதால், கனடாவின் கச்சா எண்ணெய் மாற்றப்படக்கூடிய நிலை உருவாகியுள்ளதாக அரசியல் மற்றும் பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதன் விளைவாக, கனடாவின் ஆற்றல் வருவாயில் பெரிய வெற்றிடம், சர்வதேச சந்தைகளில் கனடாவின் செல்வாக்கு குறைவு, அமெரிக்காவுக்கு மேலாதிக்கம் போன்ற நிலைமைகள் உருவாகலாம் என்ற அச்சம் நிலவுகிறது.

வெனிசுலா நடவடிக்கைக்கு அடுத்த நாளே, கிரீன்லாந்தின் இறையாண்மை குறித்தும் ட்ரம்ப் கேள்வி எழுப்பினார். "தேசிய பாதுகாப்புக்காக கிரீன்லாந்து எங்களுக்கு தேவை. டென்மார்க் இதை பாதுகாக்க முடியாது," என்று அவர் கூறியது, சர்வதேச ஒப்பந்தங்களையும் எல்லைகளையும் புறக்கணிக்கும் மனநிலையை வெளிப்படுத்துவதாக விமர்சிக்கப்பட்டது.

மேலும், கொலம்பியா மற்றும் மெக்ஸிகோ ஆகிய நாடுகளுக்கும் அவர் வெளிப்படையான மிரட்டல்களை விடுத்தார்.

# கனடியப் பிரதமர் கார்னி பிரான்ஸிற்கு விஜயம்



உக்ரைனில் நடைபெறும் ரஷ்யப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியின் ஒரு பகுதியாக, கனடா பிரதமர் மார்க் கார்னி பிரான்ஸின் பாரிஸ் நகருக்கு பயணம் மேற்கொள்கிறார்.

இந்தப் பயணத்தின் போது, கனடா, பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளை உள்ளடக்கிய 'கோலிஷன் ஆஃப் த வில்லிங்' எனப்படும் கூட்டணியின் தலைவர்களுடன் கார்னி சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளார்.

ரஷ்யா உக்ரைனைத் தாக்கியதற்கு நான்கு ஆண்டுகள் நிறைவடைய உள்ள நிலையில், பேச்சுவார்த்தை மூலம் அமைதி உடன்படிக்கையை விரைவுபடுத்துவதே இந்தச் சந்திப்பின் முக்கிய நோக்கமாகும்.

உக்ரைனை வலுப்படுத்துவதும், எதிர்காலத்தில் ரஷ்யாவின் தாக்குதல்களைத் தடுப்பதும் தான் தனது முதன்மை இலக்கு என கார்னி தெரிவித்தார்.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து உக்ரைன் பாதுகாப்பு உத்தரவாதங்களை நாடி வரும் நிலையில், கனடா தொடர்ந்து உறுதியான ஆதரவை வழங்கும் என்றும் அவர் கூறினார்.

கடந்த மாத இறுதியில் ஹாலிஃபாக்ஸில் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கியை கார்னி சந்தித்தபோது, 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி மற்றும் கடன் உத்தரவாதங்களை கனடா அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் பொருளாதார மேம்பாட்டு ஆலோசகராக கனடாவின் முன்னாள் துணைப்பிரதமர் நியமனம்





கனடாவின் முன்னாள் துணை பிரதமரும் முன்னாள் மத்திய அமைச்சருமான கிறிஸ்டியா ஃப்ரீலண்டை உக்ரைனின் பொருளாதார மேம்பாட்டு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கியினால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரஷ்யாவுடன் நடைபெறும் போரின் சூழலில் உக்ரைனுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி வரும் ஃப்ரீலண்ட், சோவியத் ஒன்றியம் வீழ்ந்த பின்னர் தவறவிடப்பட்ட வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டால், உக்ரைன் ஒரு வலிமையான பொருளாதார சக்தியாக மாற முடியும் என்று முன்பே தெரிவித்திருந்தார்.

உக்ரைன் தனது உள்நாட்டு தாங்குதிறனை வலுப்படுத்த வேண்டிய அவசியம் இருப்பதாக ஜெலன்ஸ்கி கூறினார்.

முதலீடுகளை ஈர்ப்பதும், பொருளாதார மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதும் தொடர்பாக கிறிஸ்டியா மிகுந்த அனுபவமும் திறனும் கொண்டவர் என அவர் குறிப்பிட்டார்.

தூதரக முயற்சிகள் விரைவில் பலனளித்தால் உக்ரைனின் மீட்புக்காகவும், கூட்டாளிகளின் தாமதம் காரணமாக போர் நீடித்தால் எங்கள் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்காகவும், உக்ரைன் தனது உள்நாட்டு உறுதியை பலப்படுத்த வேண்டும் என ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைனிய வம்சாவளியைச் சேர்ந்த ஃப்ரீலண்ட், ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான கனடா அரசில் அமைச்சராகவும் துணை பிரதமராகவும் பணியாற்றியவர். தற்போதைய பிரதமர் மார்க் கார்னி, உக்ரைன் மறுசீரமைப்புக்கான கனடாவின் சிறப்பு பிரதிநிதியாக அவரை நியமித்துள்ளார்.

கடந்த செப்டம்பரில் அமைச்சரவையிலிருந்து விலகிய ஃப்ரீலண்ட், இன்னும் டொரோண்டோவில் உள்ள யூனிவர்சிட்டி – ரோஸ்டேல் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்றும் அவர் முன்பே அறிவித்துள்ளார்.

இதனிடையே, இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டைத் தலைமையிடமாகக் கொண்ட புகழ்பெற்ற கல்வி அறக்கட்டளையான ரோட்ஸ் டிரஸ்டின் புதிய தலைமை செயல் அதிகாரியாக ஃப்ரீலண்ட் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தப் பதவியைத் தொடர்ந்து அவர் ஜூலை 1 முதல் ஒக்ஸ்போர்டுக்கு இடம் பெயர உள்ளார்.